இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அப்பொழுது இயேசு அமர்ந்து, பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்றார். பிறகு அவர் ஒரு சிறு பிள்ளையை எடுத்து, அவர்கள் நடுவே நிறுத்தி, அதை அரவணைத்துக் கொண்டு, "இத்தகைய சிறுபிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக் கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னை மட்டும் அல்ல, என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார்" என்றார். (மாற்கு 9:35-37)

# கொண்டாடுதல், செவிமடுத்தல், இணைந்து பயணித்தல்




**பிளந்தோங், ஜொகூர்:** தீபகற்ப மலேசிய வட்டார மேய்ப்புப் பேரவை 2024, கடந்த ஆகஸ்டு மாதம் 25 முதல் 27 வரை இங்குள்ள மஜோடி மையத்தில் சிறப்பாக நடைபெற்றது. இப்பேரவையில் கோலா லம்பூர் உயர்மறைமாவட்டம், பினாங்கு மற்றும் மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டங்களிலிருந்து அருள் பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் என 427 பேர் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கிழங்கு மலேசியாவிலிருந்து இரு பார்வையாளர்களும் பினாங்கு குருத்துவக் கல்லூரி மாணவர்களும் இந்தப் பேரவையில் சிறப்பு பங்கேற்பாளர்களாக அழைக்கப் பட்டிருந்தனர்.

இப்பேரவையின் கருப்பொருளான கொண்டாடுதல், செவிமடுத்தல் மற்றும் ஒன்றித்துப் பயணித்தல், பங்கேற்பு மற்றும் மறைத்தூதுரைத்தல் உணர்வோடு ஒவ்வொரு நாளும் ஒரு தலைப்பில் மூன்று நாளும் காலையில் பேருரை இடம்பெற்றது. பேராயர் ஜூலியன் லியாவ், கர்தினால் செபஸ்தியன் மற்றும் ஆயர் பெனர்ட் போல் ஆகிய மூவரும் மூன்று நாள் காலை சொற்பொழிவுகள் வழங்கினர்.

மேற்கண்டபேரவை பங்கேற்பாளர்கள் 'தூய ஆவியாரில் ஆய்ந்துணர்ந்த பரிந்துரைகளோடு ஒரு முடிவை எய்தியது. இந்த பரிந்துரைகள் குடும்பம், திருஅவை, சூழலியல் (சுற்றுச் சூழல், இயற்கை) மற்றும் சமூகம் ஆகிய நான்கு அம்சங்களை உள்ளடக்கின.

பங்கேற்பாளர்கள், கடவுளின் குரலுக்குச் செவிசாய்க்கவும், தீபகற்ப மலேசியா திருஅவையின் மறைத்தூதுரைப் பணியில் ஒன்றித்து ஈடுபடவும் ஒன்றாக ஆழ்ந்துச் சிந்திக்கவும் அழைக்கப்பட்டனர்.

பேரவையின் வெளிப்பாடுகளாக மலர்ந்த நான்கு அம்சங்களின் முடிவுகளை மூன்று ஆயர்களும் பேரவையில் நிறைவில் வெளியிட்டனர். அவை:

## குடும்பம் (துணைபுரிதல்)

### பகுத்தறிதல்

குடும்ப விழுமியங்களை வளர்க்க நாம் அழைக்கப்படுகிறோம். சவால்களை எதிர் கொள்பவர்களுடன் சேர்ந்து, கடவுளை மையமாகக் கொண்ட குடும்பத்தை உருவாக்குவதற்கான நம்பிக்கையையும் உறவுகளையும் வலுப்படுத்துங்கள்.

### மேய்ப்புக்கான பொறுப்புகள்

1. பிணைப்பு, உருவாக்கம் மற்றும் இறைவேண்டலுக்கான நேரத்தை உருவாக்குதல்.
2. வளர்ச்சிக்கான வாய்ப்பையும் சுதந்திர மனப்பான்மையையும் ஏற்படுத்துதல்.
3. தற்போதைய சிக்கல்களின் ஒளியில் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்தல், புதுப்பித்தல்.
4. அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய, ஒருங்கிணைந்தத் திட்டங்களை உருவாக்குதல்.

## திருஅவை (இரக்கமிகுந்த)

### பகுத்தறிதல்

நாம் இரக்கமுள்ள திருஅவையாக செயல் பட அழைக்கப்படுகிறோம், இதன் மூலம் மக்கள் ஒருவருக்கொருவர் இயேசுவின் திருமுகத்தைக் காண்பார்கள். இரக்கத்துடன் இருப்பதன் மூலம், திருஅவை நாம் ஒருவருக்கொருவர் சொந்தம் என்ற உணர்வை வளர்க்கிறது மற்றும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு நமக்கு அதிகாரம் அளிக்கிறது.

### மேய்ப்புக்கான பொறுப்புகள்

1. தமது சமூகங்களின் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வது
2. பணிக்குழுக்களிடையே கூட்டு செயல்பாட்டையும் ஒருங்கிணைந்த பொறுப்பையும் ஒருவாக்குதல்
3. வளர்ந்து வரும் சூழலுக்கு மற்றும் அடிப்படை உண்மைகளுக்கு பதிலளிக்க வகையில் அ.தி.ச.வை மாற்றியமைத்தல்.
4. மறைத்தூதுப் பணியாளர்களாக உருவாகச் சீடர்களுக்குப் பயிற்றுவித்தல்.

## சூழலியல் (பணித்துவம்)

### பகுத்தறிதல்

அன்னை பூமியின் வளங்களை கொள்ளையடிப்பதையும் சுரண்டுவதையும் வீணாக்குவதையும் தடுப்பதை உள்ளடக்கிய இந்த அவசரப் பணியின் உரிமையைப் பெற்றிட நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

### மேய்ப்புக்கான பொறுப்புகள்

1. அனைத்து நிலைகளிலும் சீரான கல்வி மற்றும் செயல்படுத்தலை உறுதி செய்தல்.
2. தவிர்த்தல், குறைத்தல் மறுசுழற்சி மற்றும் நிலைப்படுத்துதல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல்.
3. பயன்பாட்டுக் கலாச்சாரத்தை நிராகரித்து படைப்பு குறித்த நீதியை நிலைநாட்டும் ஆன்மீகத்தை வளர்த்தல்.

## சமூகம் (இறைவாக்குரைத்தல்

### பகுத்தறிதல்

நற்செய்தி மதிப்புகளை வலுப்படுத்தும் அதே வேளையில் காணக்கூடிய ஒத்துழைப்பின் மூலம் ஒரு இணக்கமான சமுதாயத்தை உருவாக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

1. சமூக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
2. விழிப்புணர்வு பயிற்சிகளில் பங்கேற்றல்
3. வளங்களையும் திறன்களையும் பகிர்தல்.
4. இன்றைய சமூகச் சவால்களை எதிர்கொள்ள புதிய பணிக்குக்களை உருவாக்குதல்
5. வாழ்க்கையுடனான உரையாடலை ஊக்குவித்தல்

# ஈப்போவில் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் தோற்றுவிக்கப்பட்டது

ஈப்போ: கடந்த செப்டம்பர் 1, .2024 ஆம் நாளன்று இங்குள்ள ஜெலப்பாங் வாழ் மக்களுக்கு ஒரு பொன்னான நாள். அவர்கள் காத்திருந்த காலம் மலர்ந்தது. அன்று இங்கு எழுப்பப்பட்ட அன்னை




வேளாங்கண்ணி சிற்றாலயம் திறப்பு விழா கண்டது. அன்னைக்காக அர்ப்பணிக்கப் பட்ட இந்த சிற்றாலயம் நற்கருணை கொண்டாட்டத்தின் வழியாக திட்டம் நிறைவேறியது.

அன்றைய தினம் சிறப்பு வருகைத்தந்த பினாங்கு மறை மாவட்ட ஆயர் கர்தினால் டத்தோ ஸ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் இச்சிற்றாலய அர்ப்பணிப்பு மற்றும் திருப்பிட ஆசீர்வாத சடங்குகளை நிறைவேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டிடகு குழு தலைவர் திரு சேவியர் அவர்கள் சிற்றாலையக் கட்டடத்தின் சாவிகளை மற்றும் சட்ட ஆவணங்களை கர்தினாரிடம் ஒப்படைத்தார். அவர் அதனை தாய் திரு அவையான புனித லூர்து அன்னை தேவாலயத்தின் பங்குத் தந்தையான அருள்பணி ரோபர்ட் டேனியலிடம் ஒப்படைத்தார்.

அடுத்து, இச்சிற்றாலத்தின் அனைத்தும் பகுதிகளும் புனித நீரால் தெளிக்கப்பட்டு, அருள்பொழிவு கண்டது. தொடர்ந்து புனிதர்களின் மன்றாட்டு பாடப்பட்ட தோடு, பின்னர் கிறிஸ்மா திருத்தைலம் ஊற்றி திருப்பீடம் அருள்பொழிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் திருப்பலி கொண்டாடப்பட்டது. நிறைவாக பதக்கப் பலகை கர்தினால் அவர்களால் கையெழுத்திடப்பட்டது. இச்சிறப்புக் கொண்டாட்டத்தில் பங்கெடுக்க ஈப்போ மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகைத் தந்து இறையாசீரைப் பெற்று மகிழ்ந்தனர்.

-குளோரியா மெத்யூஸ்.

## சிங்கப்பூர் கத்தோலிக்கத் திருஅவை

சிங்கப்பூரின் மக்கள்தொகையில் பெரும் பாலானோர் சீனர். அடுத்து மலாய், மற்றும் சிங்கப்பூர் தமிழர்கள் உள்ளனர். சிங்கப்பூரின் அலுவல்முறை மொழிகளாக ஆங்கிலம், சீனம், மலாய் மொழி, தமிழ் ஆகியவை உள்ளன. 56 இலட்சத்து 37 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட சிங்கப்பூரில் 1 இலட்சத்து 76 ஆயிரம் பேர் கத்தோலிக்கர். இங்கு ஒரு மறை மாவட்டமும் மூன்று ஆயர்களும், 156 அருள் பணியாளர்களும், 156 பெண்துறவிகளும், 1817 பொதுநிலை மறைக்கல்வி ஆசிரியர்களும் உள்ளனர். தலத்திருஅவை 56 கல்வி நிலையங்களை நடத்திவருகிறது.



*சிங்கப்பூரில் திருத் தந்தையை வரவேற்ற 4 இன சிறுவர்கள்*

# ஈப்போ, புனித மரியா சிற்றாலயம் 44-ம் ஆண்டு திருவிழாவைக் கொண்டாடியது

ஈப்போ: இங்கு, புனித சகாய அன்னை பங்கின் ஒரு சிற்றாலயமாக, பத்து லாப்பான் பகுதியில் அமைந்துள்ள புனித மரியா சிற்றாலநம் அதன் 44-ம் ஆண்டு



திருவிழாவைக் கடந்த ஆகஸ்டு மாதம் 17 அன்று விமரிசையாகக் கொண்டாடியது.

பங்குத் தந்தை ஜோசப் ஸ்டீபன் அவர் களின் தலைமையில், இரு அருள் பணியாளர்களான அல்பர்ட் ஆரோக்கி யசாமி மற்றும் விக்டர் லூயிஸ் ஆகியோ ரும் இணைந்து விழா திருப்பலிகளைக் கொண்டாடினர். இவர்களின் மறையுரை கள் திருவிழாவின் கருப்பொருளான ‘நான் உங்களுக்கு எடுத்துக்காட்டுகளைக் கொடுத்துள்ளேன்’ என்பதையொட்டிய மறையுரைகள் இறைமக்களுக்குச் சிறந்த ஆன்மீக உணவாக அமைந்தது.



இன்றைய தினம் 12 சிறுவர்கள் 1 2 சீடர் களின் பெயர் கொண்ட படங்களை ஏந்திவந்து, அருள்பணி அல்பர்ட் அவர் களிடம் கொடுக்க, அவர் வலது பக்கம் ஆறு சீடர்களையும் இடது பக்கம் ஆறு சீடர்களையும் வைத்தார்.

அடுத்து, புனித சகாயா அன்னை பங்கின் சீன மற்றும் சபா இறைமக்களில் சிலர் புனிதர்கள் வேடம் அணிந்த நிகழ்ச்சி அனைவரின் மனதையும் கவர்ந்தது என்றால் மிகையாகாது. மறையுரையில் அருள்பணி அல்பர்ட் அவர்கள் புனிதர்கள் அனைவரும் எளிய வாழ்வால் இயேசு விற்கான சாட்சிய வாழ்வு வாழ்ந்தவர்கள் என்று கூறியது அனைவர் மனதிலும் ஆழப்பதிந்தது.

*-திருமதி டெய்சி பீட்டர்.*

## நற்செய்தியின் நறுமணத்தைப் பரவச் செய்வோம்!

### கிழக்குத் தீமோரில் திருத்தந்தை வேண்டுகோள்

அன்பான நண்பர்களே, நீங்கள் கிறிஸ்து வின் நறுமணமாகத் திகழ்கிறீர்கள். இந்த உருவகம் நீங்கள் அறியாத ஒன்றல்ல. ஏனென்றால், இங்குக் கிழக்கு திமோரில் சந்தன மரங்கள் மிகுதியாக வளர்கின்றன, அவற்றின் நறுமணம் மிகவும் மதிப்புமிக்கது மற்றும் பிற மக்களாலும் நாடுகளாலும் விரும்பப்படுகிறது. நீங்கள் இந்நாட்டில் நற்செய்தியின் நறுமணமாக விளங்கு கிறீர்கள்.

பசுமையும், வலிமையும் நிறைந்து, வளர்ந்து பழங்களைத் தரும் சந்தன மரங்களைப் போல, உங்கள் மக்களின் வாழ்க்கையை மதிப்பிற்கு உட்படுத்த தூய ஆவியாரின் நறுமணத்தைத் தாங்கும் மறைபரப்புச் சீடர்களாக காட்சியளிக்கிறீர்கள். இருப்பினும் கூட, பெத்தானியாவின் மரியா, இயேசுவுக்காக இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலத்தைப் பாதுகாத்து வைத்திருந்ததைப் போல, இயேசுவிட மிருந்து பெறப்பட்ட நற்செய்தி என்னும்



இந்த நறுமணத் தைலம் கவனமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இறைவன் நமக்கு அருளிய நறுமணம் என்னும் அன்பை நாமும் போற்றிப் பாதுகாக்க வேண்டும், அது ஒருபோதும் மங்காது மற்றும் அதன் நறுமணத்தையும் இழக்காது என்றுரைத் தார்.

# விண்ணரசு சேர குணத்தால் சிறுபிள்ளைகளாவோம்

பொதுக் காலத்தின் 25ம் ஞாயிறு இன்று. தாழ்ச்சியும் சேவை மனப்பான்மையும் நம்மில் வளர, திருஅவை அழைப்பு விடுக் கிறது. தாழ்ச்சியையும் சேவை மனப்பான் மையையும் நமது அன்றாட வாழ்வில் எவ்வாறு கடைபிடிக்கலாம் என்பதை இன்றைய வாசகங்கள் வழிகாட்டுகின்றன.

இன்றைய முதல் வாசகம் சாலமோனின் ஞான நூலியிருந்து எடுக்கப்பட்டது. இந்த கி.மு. முதல் நூற்றாண்டில் யூத நாட்டிற்கு வெளியே கிரேக்கத்தில் எழுதப்பட்ட இந்நூல், உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்போர், அநீதியாக, அநியாயமாக வேதனைக்குள்ளாக்கப்படும் போது இறைக் கரம் காக்கும் என்பதை வலியுறுத்துகிறது.

புனித யாக்கோபு திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இரண்டாவது வாசகம், நம்மிடையே பிளவை அன்றி, ஒற்றுமையைக் கொண்டு வருபவை மீது கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்துகிறது. வாழ்க்கை யில் சகஜமாக இருக்கும் தகராறுகளும் சஞ்சலங்களும் முற்றி விடும் அளவுக்கு விட்டுவிடக்கூடாது. ‘நான் தான் சரி, அடுத்தவர் தவறு’ என்ற தாழ்ச்சி இல்லாத சுயநலப் போக்கும், ‘என்னைவிட பெரிய வன் யார்’ என்ற இறுமாப்பும் எப்போதும் தீர்வாக அமையாது.

“யார் பெரியவன்” என்ற மனப்பான்மை, இயேசுவோடு மூன்றாண்டுகளில் ஒன்றாய் இருந்த சீடர்கள் மத்தியிலும் இருந்தது. கடந்த வாரத்தின் தொடர்ச்சியாக சீடத்துவத்தைப் பற்றிய நற்செய்தியே இன்று நமக்குத் தரப்பட்டுள்ளது. பல சிலுவை களைச் சுமந்து இயேசுவின் பின் செல்வதே சீடத்துவம் என்ற அழைப்பை ஏற்க மறுக்கும் சீடர்கள், இயேசுவை ‘அரசியல் மெசியாவாக’ கருதி, அவர் ஆட்சிக்கு வரும்போது தங்களது பதவியும் நிலையும் என்ன என்பதே சீடர்களின் எண்ணமாக இருந்தது.

இங்கே இயேசு இரண்டு முக்கியக் கருத்துகளை இன்றைய நற்செய்தி முன்வைக்கிறது. முதலாவது, குழந்தை களாக மாறுவது, இரண்டாவது பணியாளர்களாகச் செயல்படுவது. யூதப் பாரம்பரியத்தில் குழந்தைகள், தந்தையின் உடைமையாகக் கருதப்படுவர். குழந்தைகளுக்கு உரிமை யும் மதிப்பும் கிடையாது. குழந்தைகள் தங்களது தேவையைப் பூர்த்திச் செய்து கொள்வதற்கு, தந்தையையே நம்பியிருக்க வேண்டும்.

**பொதுக்காலம்-25-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | சா.ஞா 2: 17-20 |
| திரு.பாடல் | 54: 1-2. 3. 4,6 |
| 2-ம் வாசகம் | யாக் 3: 16- 4: 3 |
| மாற்கு | மாற்கு 9: 30-37 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**

குழந்தை தந்தையின் உடைமை. நாமும் தந்தையாகிய கடவுளின் உடைமை. கடவுள் நம்மை தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டதால், இதைவிட நமக்கு என்ன மதிப்பும் உரிமையும் வேண்டும்? தந்தையை முழுமையாக நம்பியிருக்கும் குழந்தையைப் போல் நாமும் கடவுளை முழுமையாக நம்பியிருக்க வேண்டும்.

மத்தேயு 18ம் அதிகாரம் 4ஆம் வசனத்தில், “இந்தச் சிறுபிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்” என இயேசு கூறுவார். ஆகவே, சிறுபிள்ளைப் போல, தந்தையாகிய கடவுளை முழுமையாக நம்பி, அவரது உடைமையாக வாழும் பொழுது, ‘ego’ எனப்படும் இறுமாப்பு தொற்றிக்கொள் ளாமல், தாழ்ச்சியும் சேவை மனப்பான் மையும் நம்மில் மலரும். இதுவே நம்மை விண்ணரசில் கொண்டு சேர்க்கும்.

*-அந்தோணி இன்னாசி, சைபர் ஜெயா*